## புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017-18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

315

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.2027/2017 (புமசு), நாள் 11.09.2017-ன்படி புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, அறக்கட்டளைப் பத்திரமானது 21.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 69/2017, நாள் 22.09.2017-ன்படி புதுக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| | மேலாண்மை குழு அமைப்பு |
|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், புதுக்கோட்டை |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, புதுக்கோட்டை |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை |
| 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (ஊராட்சிகள்) (PAPD), புதுக்கோட்டை |
| 6. | உதவி இயக்குநர், (கிராம ஊராட்சிகள்) புதுக்கோட்டை |
| 7. | மாவட்ட ஆதிதிராடர் நல அலுவலர், புதுக்கோட்டை |
| 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், புதுக்கோட்டை |
| 9. | மாவட்ட வன அலுவலர், புதுக்கோட்டை |
| 10. | மண்டல தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி |
| 11. | உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, புதுக்கோட்டை |
| 12 | மாவட்ட கருவூல அலுவலர், புதுக்கோட்டை |
| 13. | மாவட்ட சமூக நல அலுவலர், புதுக்கோட்டை |
| 14 | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை |

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு |
|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், புதுக்கோட்டை |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, புதுக்கோட்டை |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், புதுக்கோட்டை |
| 7. | மாவட்டக் கருவூல அலுவலர், புதுக்கோட்டை |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், புதுக்கோட்டை |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), புதுக்கோட்டை |

புதுக்கோட்டை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, புதுக்கோட்டை கீழராஜவீதி, பாரத வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.**37194593855)** துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பிலுள்ள 232 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 109 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 123 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 43 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2018-வரை ரூ.**1,35,99,735/-** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுநூற்று முப்பத்து ஐந்து மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

திட்டங்கள் எதற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படாததாலும் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாததாலும் 2017-18ம் ஆண்டிற்கான கணக்குத் தணிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

29/6/18

தலைவர்,
புதுக்கோட்டை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை மற்றும்
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை

29/6/18 Fmy 29/6/18